**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில்27.02.2024ஆம் நாளன்று நடைபெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நகல்**

**பொருள் எண்.01**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2021–2022–ன் கீழ் ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 247 தெருவிளக்குகள் அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் புதிதாக மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு வருகிறது.இதனால் தெருமின் விளக்குகள் தானியங்கி இல்லாமல் இயக்கப்பட்டு வருகிறது.எனவே புதிதாக 18 எண்ணிக்கை மின் இணைப்புகள் பெறவேண்டியுள்ளதால் அதற்காக மீட்டர் போர்டு மற்றும் பெட்டிகள் பொருத்த வேண்டியுள்ளது.எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1162/2021/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 232

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.02**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமை திட்ட பணிகளுக்காக விளம்பர பலகைகள் வைக்கவும், கிராம நிர்வாக அலுவலகம், வேளாண்துறை அலுவலகம், காந்திநகர் சமுதாய கூடம், நகராட்சி திருமண மண்டபம் மற்றும் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் முகாம்கள் அமைக்க ஏதுவாக குடிநீர் வசதி மற்றும் தேவையான இடங்களில் சாமியான அமைப்பதற்கும் ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.855/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றமைக்கும், பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 233

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.03**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022–ன் கீழ் ரூ.359.85 இலட்சம் மதிப்பீட்டில் வாரச்சந்தை மேம்படுத்துதல் பணி மேற்கொள்ள ஏதுவாக சர்வே

எண்.46/1,2,3 Part–ல் உள்ள 87081.50சதுர மீட்டர் அளவுள்ள மேற்படி இடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் ந.க.எண்.2212/2022/ஈமா–2 நாள்.13.06.2022ல் சிவில் டிசைன் வழங்கப்பட்டு அதன் உத்தரவு நகல் மற்றும் வரைபடம் பெறப்பட்டுள்ளது. இப்பணியை G.K.PLANNERS, PERUNDURAI அவர்களால் ஆன்லைன் அப்ளிகேசன், Checklist, EDCR Drawing Work Hard copies, Blueprint Drawing Work, Topo plan, Key Plan, Professional engineers affidavits and reports, Final blueprint copies தயார் செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் Civil Design பெற்று சமர்பித்துள்ளார். இதற்கான கட்டணம் ரூ.1,13,000/–ஐ G.K.PLANNERS, PERUNDURAI வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.014/2024/எப்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 234**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.04</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் நீருந்து நிலையம் மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாதந்தோறும் ஏற்படும் மின்தடை நாட்களில் ஜெனரேட்டர்கள் வாடகைக்கு எடுத்து பயன்படுத்தியதற்கான செலவினம் ரூ.32, 500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.146/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 235**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.05</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள்டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 பொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.V.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர்மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்றுநோய் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் வர இருப்பதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதம் ஆகும் என்பதால் இப்பணியினை தொடர்ந்து 01.04.2024 முதல் 30.06.2024 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு திரு.V.ஜெயராஜ், ஒப்பந்ததாரர்

அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 236**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.06</u>

2023–24ஆம் ஆண்டிற்கு ஈரோடு மாவட்டத்திற்கு சட்டபேரவை பொது கணக்குக்குழு மற்றும் அரசு உறுதிமொழிக்குழு வருகை புரிந்து ஆய்வுப் பணிகள் மற்றும் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. அக்குழுக்கள் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரியும்போது அக்குழு உறுப்பினர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் ஏற்படுத்தித் தர ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22047/2023/அ7, நாள்.17.11.2023 மற்றும் ந.க.எண்.26656/2023/அ7, நாள்.08.01.2024 ஆகிய கடிதங்களின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டபேரவை பொது கணக்குக்குழு மற்றும் அரசு உறுதிமொழிக்குழு உறுப்பினர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுக்கான ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.150/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 237**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.07</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அம்ரூத் 2.0 2023–2024–ன் கீழ் இந் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சர்வே எண்.15/1–ல் உள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள நீர்நிலையை புனரமைப்பு செய்தல் பணிக்காக 06.02.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சர்வே எண்.15/1–ல் உள்ள | 9.00 இலட்சம் | திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | இடத்தில் ஏற்கனவே உள்ள நீர்நிலையை புனரமைப்பு செய்தல் பணி | | திரு.எம்.சுப்பிரமணியம், காராப்படி | 4.40% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.07% குறைவாக வழங்கியுள்ள திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1810/2022/இ1)**

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 238

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.08</u>**

இந்நகராட்சியின் வருவாய் நிதி, மூலதன நிதி மற்றும் குடிநீர் நிதிக்கான 2024–2025ஆம் ஆண்டின் உத்தேச வரவு செலவு திட்டம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1132/2024/அ1)**

**அலுவலகக் குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 239

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.09</u>**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–2022ன் கீழ் ரூ.69.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03, தில்லைநகர் பகுதியில் புதிதாக விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய பூங்கா அமைக்கப்பட்டது. மேற்படி கட்டப்பட்ட பூங்காவினை மூன்றாம் தரப்பு ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு முதல்வர், கொங்கு பொறியியல் கல்லூரி, பெருந்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஆய்வறிக்கைக்கான கட்டணமாக ரூ.11,800/–ஐ IIP CELL GRANT IN AID ACCOUNT என்ற பெயரில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையை செலுத்த வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.397/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 240

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4209/2024/P3 நாள்.15.02.2024–ல் IMPLEMENTATION OF CHILDREN AND ADOLESCENTS LIBRARIES AND DIGITAL INFRASTRUCTURE OF THE SCHEME FOR SPECIAL ASSISTANCE TO STATES FOR CAPITAL INVESTMENT FOR THE YEAR 2023–22024–ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, பேருந்து நிலையம் பின்புறம் உள்ள நூலகத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்ட மத்திய அரசு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி கட்டிடம் கட்ட ரூ.22.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.221/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 241**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் ஏற்கனவே உள்ள ஒரு மின்மோட்டார் அடிக்கடி பழுதடைந்து வருவதால் குடிநீர் விநியோக அவசியம் கருதி புதிதாக மின்மோட்டார் ஒன்று கொள்முதல் செய்து பொருத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.253/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 242**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.52.07 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து இந்நகராட்சி பகுதிக்கு புதிதாக பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் நகராட்சி பகுதிக்குள் புதிதாக பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட பணி மேற்கொள்ளும்போது பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து ஏற்கனவே இந்நகராட்சி பகுதிக்கு வரும் பிரதான குழாய்கள் மற்றும் நகராட்சி பகுதிக்குள் உள்ள பகிர்மான குழாய்களில் எதிர்பாராத விதமாக பழுதடைய வாய்ப்புள்ளது. எனவே மேற்படி ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி

மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.252/2024/இ1)**

**அலுவலககுறிப்பு :**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 243**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.13</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு தற்போது கணினி பயன்பாட்டிற்கு SPOT NET CONNECTION ( ஸ்பாட் நெட் கனெக்சன் ) மூலம் நெட்வொர்க் சேவை பெறப்பட்டு வருகிறது. நகராட்சியில் பொது மக்களிடமிருந்து சொத்துவரி குடிநீர் வரி மற்றும் இதர வரியினங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் நெட்வொர்க் சேவை சில சமயங்களில் பழுது ஏற்பட்டு வருவதால் புதிதாக வரப்பெற்றுள்ள ரெயின்போர்டு நெட்வொர்க் சேவை மூலம் நெட்வொர்க் சேவை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.254/2024/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 244**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.14</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் உள்ள வீடுகள், கடைகள், நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தினமும் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்து சேகரித்து செயலாக்கம் செய்யும் மையங்களில் ஒப்படைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.33552/2022/EA-2-SWM-4, நாள்.10.01.2023-ன் படி நிர்வாக அனுமதி பெற்று மூன்றாண்டு காலத்திற்கு இப்பணியினை மேற்கொள்ள 17.05.2023-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இவ்ஒப்பந்தபுள்ளியில் M/s. LD Manpower Solutions, Vellore (DT), நிறுவனத்தினரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் ஏற்றுகொள்ளப்பட்டு அந்நிறுவனம் மூலம் இப்பணியினை ஓர் ஆண்டிற்கு மேற்கொள்ளவும் அதன் பிறகு நிறுவனத்தின் செயல்பாடுகளின் அடிப்படையில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு பணி வழங்கவும் நகர்மன்ற தீர்மான எண்.87 நாள்.21.06.2023-ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிறுவனத்தினரின் ஓராண்டு பணி 01.06.2024ஆம் தேதியுடன் முடிவடைவதால் பொதுசுகாதார பணியின் அவசியம் கருதியும் மேற்படி நிறுவனத்தின் ஓராண்டு கால செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்துவருவதால் ஒப்பந்த நிபந்தனைகளின் (Tender Conditions) படியும், (Bid Documents) ஒப்பந்தத்தின் (Agreement) படியும் 01.06.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு அந்நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் ஏற்கனவே அந்நிறுவனத்திற்கு வழங்கி வரும்

Tipping Fee வுடன் 10% சதவீதம் உயர்த்தி வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1316/2021/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 245**

**தீர்மானம் : Tipping Fees 10% உயர்வு செய்யாமல் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.15</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 2024-2025 முதல் 2026-2027 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு 21.02.2024 ஆம் தேதியன்று பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி பொதுஏலத்தில் கீழ்க்கண்டுள்ள நபர்கள் கலந்து கொண்டனர் உயர்ந்தபட்ச ஏலம் கோரிய ஒப்பந்தாரருக்கு உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமம்விவரம் | ஏலத்தில் கலந்துகொண்டவர்களின் பெயர் | அரசுமதிப்பு தொகை | பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை | ஒப்பந்ததாரர் பெயர் : என்.ஆசிக் அலி, கோவை | 55,00,000/- | 58,00,000/- |
| 2. | | ஒப்பந்ததாரர் பெயர் : சபீக் அலி, கோவை | | 57,60,000/- |
| 3. | | ஒப்பந்ததாரர் பெயர் : வி.ஜெயராஜ் | | 37,00,000/ |
| 4. | | ஒப்பந்ததாரர் பெயர் : கே.சுரேஷ் புளியம்பட்டி | | 0 |

**(ந.க.எண்.825/2023/அ1)**

**அலுவலககுறிப்பு :-**

மேற்கண்டகுத்தகைஇனம் தினசரி சந்தைக்கு வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள ஒப்பந்தாரர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர், அரசுமதிப்பைவிடஉயர்ந்தபட்சஏலதொகை கோரிய வரிசை எண் 1-ல் உள்ள

திரு.என்.ஆசிக்அலி, கோவை என்பவருக்கு ஒப்பந்த உரிமம்வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண் : 246**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.16**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட விவரப்படி 5 கடைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டதில் குத்தகை உரிமதாரர்கள் கொரனா நோய்தொற்று தீவிரமடைந்த காலங்களில் நஷ்டம் ஏற்பட்டு கடையினை தொடர்ந்து நடத்த முடியாமல் குத்தகை உரிமகாலம் முழுவதும் நடத்தாமல் பாதியிலேயே விட்டு சென்றுவிட்டனர். மேற்படி கடை நடத்தாத காலங்களுக்கும் தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. தற்போது ஒருகுத்தகைதாரர் காலமாகிவிட்டார். மேலும், கடையினை தற்போது நடத்த குத்தகைதாரர்கள் முன்வரவில்லை. தற்போது யாரும் குத்தகைதாரராக இல்லை. மேற்படி குத்தகை உரிமதாரர்கள் செலுத்திய வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகைகளை வாடகை செலுத்தாத காலங்களுக்கு சரிகட்டப்பட்டுள்ளது. மேற்படி, 2019 – 2020 முதல் 2021 – 2022 வரை மீதமுள்ள வாடகை தொகைகளை நாளது தேதிவரை தொகைரூ.51087/– வசூலிக்க இயலவில்லை. இனிவரும் காலங்களிலும் வசூலிக்க வழிவகை இல்லாத காரணத்தினால் மேற்படி நிலுவை தொகயை கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்புஎண் | பெயர் / முகவரி | கடை எண் | கடைஉரிமகாலம் | செலுத்தத வறியகாலம் | செலுத்த வேண்டியதொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 060/2016050 | கே.கிருஷ்ணமூர்த்தி | 14 | 01.04.2021 முதல் 31.03.2023 | 2021 – 22 | 7785 |
| 2 | 060/BD01/00008 | எஸ்.தாமோதரசாமி | 24 | 01.02.2019 முதல் 31.01.2022 | 2021 – 22 | 9479 |
| 3 | 060/BD01/00015 | எஸ்.மணிகண்டன் | 6 | 01.02.2019 முதல் 31.01.2022 | 2021 – 22 | 28163 |
| 4 | 060/BD01/00035 | எஸ்.ஜெயகண்டன் | 23 | 01.09.2018 முதல் 31.08.2021 (30.08.2021இல்இறப்பு) | 2021 – 22 | 639 |
| 5 | 060/BD01/00060 | எம்.செல்வன் | 23 | 01.08.2020 முதல் 31.07.2023 | 2021 – 22 | 5021 |
| **மொத்தம்** | | | | | | **51087** |

**(ந.க.எண். 1308 /2020/அ2)**

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 247**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.17</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் ஈப்பு ஓட்டுநர் பணியிடத்திற்கு பணி நியமனம் வழங்கக்கோரி திரு.சி.ரகுநாதன் த/பெ சின்ராஜ் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட W.P.No.14301/2011 என்ற வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடியமைக்கான வழக்கு கட்டணம் ரூ.30,000/- அரசு வழக்கறிஞர் திரு.டி.கோபால் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.468/2024/சி1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இவ்வழக்கு 22.02.2024 அன்று முடிவுக்கு வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையை வழங்கலாம்.

**தீர்மான எண் : 248**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**(ஒம்)திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

**ஆணையாளர்(மு.கூ.பொ)**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**